**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 02.12.2015

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 29°செ முதல் 33°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 20°செ முதல் 26°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 8°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் மிதமான முதல் கன மழை காணப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (02.12.2015 முதல் 06.12.2015)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூரில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். டிசம்பர் 3ம் மற்றும் 4ம் தேதிகளில் மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 87 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ 3.12.15 அன்று கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மிதான மழையுடன் காற்றின் வேகம் 7 கி.மீ விட அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்கள் மற்றும் மத்திய பருவத்தில் நடவு செய்த கரும்பிற்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ அதிக மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை மஞ்சள் பயிரில் கிழங்கு அழுகல் நோயையும் மற்றும் மல்லி, முல்லை, சாமந்தி, பயிரில் வாடல் நோயையும் கட்டுப்படுத்த போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும். சம்பா நெல் பயிரில் வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ மழையின் காரணமாக தற்போது காணப்படும் மண்ணின் ஈரப்பதத்தை கருத்தில் கொண்டு தென்னை மரத்திற்கு இரண்டாம் பருவ உரமிடுவதற்கு இதுவே உகந்த தருணமாகும். ஐந்து வருடங்களுக்கு மேலான மரங்களுக்கு 25 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்ட் அல்லது பசுந்தாள் உரத்துடன் 0.6 கிலோ யூரியா, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 1 கிலோ மியூரட்டாப் பொட்டாஷ் உரத்தினை வட்டப் பாத்தியில் இடவும்.
- ✓ தற்போது நிலவும் வெப்பநிலை, ஈரப்பதத்தை கருத்தில் கொண்டு பால்கறக்கும் கால்நடைகளை காலை 7 முதல் 9 மணிக்குள் கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று செயற்கை முறையில் கருவூட்டல் செய்யவும்.

## 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை $28^0$செ $29^0$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 86 முதல் 95 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை நீர் சூழந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்ப்படுத்த நீரினை வடித்து வேர்ப் பகுதிக்கு காற்றோட்ட ம் கிடைக்கச் செய் யவும்.
- ✓ அடுத்து வரும் 5 நாட்களுக்கு மிதமான முதல் கன மழை பொழிய வாயப்புள்ளதால் தேங்கி நிற்கும் இடங்களில் சம்பா பயிரில் மேலுரம் இடுவதை தவிாத்து மற்றும் தாளடி நடவு செய்யும் பொழுது அடியுரம் இடுவதை தவிர்த்து மழை நின்ற பின் நீரை வடித்து விட சீராகத் தூவவும்.
- ✓ சம்பா நெற்பயிரில் ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட்டால் இதனை நிவர்த்தி செய்ய ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா + ஜிப்சம் 18 கிலோ + வேப்பம்புண்ணாக்கு 4 கிலோ என்றளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து பின்னர் 10 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து தண்ணீர் வடிந்தவுடன் வயலில் இடவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் மற்றும் இலை கீறல் நோய்கள் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 20 சத பசுஞ்சாணக்கரைசலை நோய் அறிகுறி தென்பட்டவுடன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும். (40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்.) அல்லது காப்பர் ஹைட்ராக்சைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ சம்பா நெற்பயி.ரில் இலைமடக்குப் புழு தாக்குதல்இதன்படுகிறது. இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு குளோர்பைரிபாஸ் 20 இ.சி. 500 மில்லி, அல்லது புரப்னோபாஸ் 50 இ.சி. 400 மில்லி வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் தேளிக்கவும்.

## 3. தெற்கு மண்டலம் - 1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $23^0$செ முதல் $24^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 75 முதல் 94 சதவிகிதமாகவும்

பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 20 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் மிக கனமழை எதிர்பார்க்கப்படுவதால் நெல், இறவை மற்றும் மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும். மருந்து தெளித்தல் மற்றும் மேலுரமிடுதலை தவிர்க்கவும்.
- ✓ வரும் தினங்களில் மிக கனமழை எதிர்பார்க்கப்படுவதால் மழை உள்ள சமயங்களில் கால்நடைகளை மேயச்சலுக்கு அனுமதிப்பதை தவிர்த்து அவற்றை கொட்டில்களில் பாதுகாப்பாக பராமரிக்கவும்.

**4. தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் தெற்கு மண்டலமான திண்டுக்கல், மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும் இலேசானது முதல் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலை 29°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 23°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 85 முதல் 91 சதவீதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 5 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ வரும் தினங்களில் ஆங்காங்கே கனமழை எதிர்பார்க்கப்படுவதால் வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும்.
- ✓ அடுத்த மூன்று நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் தங்களுடைய நெற்பயிர்களுக்கு பூச்சி மருந்தை அடிப்பதையும் மற்றும் உரமிடுவதையும் தள்ளிப் போட வேண்டும்..
- ✓ நெற்பயிரில் பழுப்பு நிற நோய் காணப்பட்டால் அதனைக் கட்டுப்படுத்த விவசாயிகள் 10-15 நாட்கள் இடைவேளியில் 2-3 முறை மேன்கோசேப் 2 கிராம், ஒரு லிட்டர் தண்ணரில் கலந்து தெளிக்க வேண்டும்.
- ✓ நெற்பயிரில் இலைச்சிலந்தியின் தாக்குதல் தென்பட்டால் இதைக்கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு டைக்கோபால் 500 மில்லி அல்லது நனையும் கந்தநத்தூள் 400 மில்லி என்றளவில் 400 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ தொடர்ந்து வயல்களில் தண்ணீர் தேங்குவதால் கரும்பில் இரும்பு சத்து பற்றாக்குறை காணப்படும். ஆகவே இரும்பு சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்ய 250 கிராம் பெரஸ் சல்பேட் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ கரும்பில் துரு நோய் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு மேன்கோசேப் 2கி. தெளிக்க வேண்டும்.

- ✓ பெறப்பட்ட கனமழையாலும் மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினாலும் மக்காச்சோளத்தில் அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு மெட்டலாக்சைல்+ மேன்கோசெப் @ 100 கிராம் ஆகியவற்றை விதைத்த 20 ம் நாள் தெளிக்கவும்.

**5. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 85 முதல் 88 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ மாவட்டத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கனத்த மழை வரை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ பயிர்களில் இலைப்பேண் தென்பட்டால் டைமீதோயேட் 1 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- ✓ வரும் நாட்களில் பலத்த மழை இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், நிலத்தில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**6.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 27°செ முதல் 30°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 84 முதல் 88 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 3 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வடகிழக்கு பருவமழை தீவரமடைந்துள்ள படியால் நாமக்கல் போன்ற உள் மாவட்டங்களிலும் மழை எதிர்பார்க்கப்படுகிறது, நல்ல மூட்டமும்., மழையுடன் கூடிய வானிலையும் நிலவும் என்பதால் வெப்ப அளவுகள் 29,0°செ,(84,2°பா) மற்றும் 22,0°செ,(71,6°பா), என்ற அளவில் காணப்படும். இதனால் கோழிகளின் உடல் வெப்பத்தை குறிப்பிட்ட அளவில் பேண அதிக தீவனம் எடுக்க விழையும், இது பொருளாதாரமாக சற்றே தேவையற்றதாக கருதப்படும். இதனை நிவர்த்தி செய்ய தீவனத்தில் எரிசக்தியின் அளவை 2575,2600 கிலோ கலோரி வரை கொடுக்கவேண்டும்.

  அதற்கேற்றாற்போல் புரதத்தின் அளவையையும் 0,5% வரை குறைக்கலாம். முட்டையின் எடை அளவிற்கு மீறி போகாதா வண்ணம் பார்த்துக்கொள்ளுதலும் அவசியமாகும்.

- ✓ மழைக் காலங்களில் வெள்ளாட்டுக் குட்டிகள் அதிகம் இறப்பிற்கு உள்ளாகும். ஆகையால் சிறு குட்டிகளுக்கு குடற்புழு நீக்க மருந்து அருகில் உள்ள கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி கொடுக்க வேண்டும். மேலும் ஆட்டுக் குட்டிகள் மழையில் நனையாவண்ணம் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டும். கோனிப்பைகளின் மேல் குட்டிகளை படுக்க வைக்க வேண்டும்.

**7. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை **28**°செ முதல் **29**°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **22**°செ முதல் **23**°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் **85** முதல் **96** சதவிகிதமாகவும், காற்றின் வேகம் **4** கி.மீ முதல் **25** கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அதிக காற்றுடன் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் கன்றுகளுக்கு தகுந்த பாதுகாப்பு செய்யவும்.
- ✓ காய்ந்த, நோய் பூசாணம் இல்லாத தீவனங்களை அளிக்கவும்.
- ✓ வேம்பு மற்றும் நொச்சி இலைகளை கொண்டு புகை ஏற்படுத்தி நோய் கிருமிகளை பரப்பும் பூச்சிகளை விரட்டவும்.
- ✓ விளக்குகள் மூலம் குடில்களை வெதுவெதுப்பாக வைக்கவும்.
- ✓ பயிர்களுக்கு உரங்கள் அளிக்க வேண்டாம்.
- ✓ அனைத்து பயிர்களுக்கும் பாதுகாப்பாக வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

**8.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை **30**$^{0}$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **23**$^{0}$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் **90** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 7 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வாழைக் கன்றுகள் மழை நீரினால் சேதம் ஏற்படுவதை தடுக்க வடிகால் வசதி செய்யவும்.
- ✓ வரும் நாட்களில் **160.0** மி.மீ அளவு மழை பெய்ய வாய்ப்புள்ளதால் தென்னையில் உரமிடுதலை தவிர்க்கவும்
- ✓ மழை இருப்பதால், அறுவடை செய்யப்பட்ட மிளகினை உலர்வான இடங்களில் சேமிக்கவும்.
- ✓ குண்டு மல்லி பூவில் இடை பருவத்தில் தரைமட்டத்தில் இருந்து **50** செ.மீ உயரத்தில் கவாத்து செய்யவும். கவாத்து செய்த பகுதியில் பூசாணைக்கொல்லி தடவவும்.

- ✓ மழை இருப்பதால், அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை குறைந்தபட்ச ஈரப்பதம் 12% உலர்த்தியபின் உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம், கோவை - 3**